ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2292/04 - 2022 අගෝස්තු මස 08 වැනි සඳුදා - 2022.08.08

2292/04 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: டிக்/லேன்/02/62

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மாத்தறை மாவட்டம், திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 456பீ, போதரகந்த கிராம அலுவலர் பிரிவில், போதரகந்த கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தின் மு. பி. மாறை 2897 ஆம் இலக்க அசல் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்ட காணித் துண்டு.

1. **துண்டு இல. 01**

காணியின் பெயர்: தவட்டகஹவத்த; விபரம்: வீட்டுத் தோட்டமும், 10 முதல் 20 வருட வயதளவுள்ள கலப்பு பயிர்செய்கையும், நிரந்தரக் கட்டிடமொன்றும், தற்காலிக கட்டிடமொன்றும், நீர்த்தொட்டிகள் 02 உம், கழிவறையொன்றும் உள்ளன; உரிமை கோருவோர்: மெரெஞ்ஞு ஸோமஸுந்தர அல்லது மெரெஞ்ஞு ஸோமதாஸ, கிரிலியனகெவத்த, வத்தேகம தெற்கு, திக்வெல்ல; விஸ்தீரணம்: 0.5611 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு திக்வெல்ல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சுஸந்த அத்தநாயக்க,
பிரதேச செயலாளர்,
திக்வெல்ல.

பிரதேச செயலகம்,
திக்வெல்ல,
2022, ஓகத்து 01.

EOG 08 - 0046